மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26 ஆம் நாள் வியாழக்கிழமை
இ.ம.எண்.533/2018
அசல் வழக்கு எண்.102/2018

1. என்.கோவிந்தன்
2. ஜி.செல்வராஜ் ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. என்.முத்து
2. எம்.விஜயகுமார் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 24.08.2021 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.சரவணன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.அருணாசலம் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## உத்தரவு

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26 விதி 9 மற்றும் பிரிவு 151ன் கீழ் நீதிமன்ற ஆணையாளரை நியமிக்க உத்தரவிட கோரி மனுதாரர்கள் மனுதாக்கல் செய்துள்ளார்கள்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

(i) ச.எண்.139 ஏ/1 பி 1ம்மனுதாரர், அவருடைய சகோதரர் 1ம்எதிர்மனுதாரர், மணிவண்ணன், அவர்களுடைய தாயார் மற்றும் சகோதரிக்கு பாத்தியப்பட்டதாகும். 05.06.1995ல் அவர்கள் சிவானந்தம் என்பவருக்கு பொது அதிகார பத்திரம் எழுதிக் கொடுத்தனர். மேற்படி பொது அதிகாரப் பத்திரத்தின் அடிப்படையில் சிவானந்தம் மனையிடங்களாக பிரித்து விற்பனை செய்துள்ளார். அச்சமயத்தில் ச.எண்.139/1பி–ல் 15 அடி அகலத்தில் பஞ்சாயத்து கான்கிரிட் ரோட்டிலிருந்து ச.எண்.47ஏ/2ஏ வரை ஒரு வண்டிப் பாதையை அமைத்தார். அப்போதிருந்து அந்த வண்டிப்பாதை 15 அடி

அகலத்தில் ச.எண்.139 ஏ/1பி சென்றும் ச.எண்.47 ஏ/2 ஏ மற்றும் பொது கிணறு வரை 12 அடி அகலத்திலும் செல்கிறது.

(ii) அந்த 12 அடி அகல வண்டிப் பாதைக்கு கிழக்கே மணிவண்ணன், 1ம்எதிர்மனுதாரர் மற்றும் மனுதாரர்களின் சொத்துகள் அமைந்துள்ளது. 1ம்எதிர்மனுதாரர் மணிவண்ணனிடமிருந்து 0.20 செண்டை ச.எண் 47 ஏ/2 ஏ–ல் 08.09.2003 தேதியிட்ட கிரய பத்திரத்தின் மூலம் 20 செண்டை கிரயம் பெற்றார். அவர் வாங்கிய 20 செண்டில் 1ம்எதிர்மனுதாரர் தார்சு வீடு கட்டியுள்ளார்.

(iii) 01.10.2017 ல் 1ம்எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு தெரியாமல் மனுதாரர்கள் வெளியே சென்ற சமயத்தில் தென்வடல் வண்டிப்பாதையில் 7 அடியை ஆக்கிரமித்து காம்பவுண்ட் சுவர் கட்டிவிட்டனர். தற்போது பொது வண்டித்தடம் 5 அடி மட்டுமே உள்ளது. ஆகவே பொருட்களை எடுத்துச் செல்லவும், டிராக்டர்களும் செல்லமுடியாமலும் உள்ளது. 1ம்எதிர்மனுதாரரை பலமுறை தொடர்புகொண்டு ஆக்கிரமிப்பை அகற்ற கோரிய போதும் 1ம்எதிர்மனுதாரர் ஆக்கிரமிப்பை அகற்றவில்லை. எனவே ஆக்கிரமிப்பை நிரூபிப்பதற்காக நீதிமன்ற ஆணையாளரை நியமிக்க கோரி மனுதாரர்கள் மனுதாக்கல் செய்துள்ளார்கள்.

<u>2) 1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 2ம்எதிர்மனுதாரரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்:</u>

(i) ச.எண்.139 ஏ/பி1 என்பது 1ம்மனுதாரருக்கும், அவரது சகோதரர்களுக்கும், 1ம்எதிர்மனுதாரருக்கும், மணிவண்ணனுக்கும், அவர்களுடைய தாயார் காளியம்மாள் மற்றும் சகோதரி சாந்திக்கு பாத்தியப்பட்டது என கூறுவது பொய்யாகும். 15 அடி அகலத்தில் ச.எண்.139 ஏ/1பி–ல் இருந்து பஞ்சாயத்து கான்கிரீட் ரோடு ச.எண். 47 ஏ/2 ஏ வரை செல்கிறது என கூறுவது பொய்யாகும். மேலும் ச.எண்.139 ஏ/1பி–லிருந்து செல்லும் வண்டிப்பாதை ச.எண்.47 ஏ/2 ஏ வரை சென்று அதன்பின்னர் 12 அடி அகலத்தில் செல்வதாக கூறுவது பொய்யாகும்.

(ii) 1ம்எதிர்மனுதாரர் கிரயம் பெற்ற ச.எண்.47 ஏ/2 ஏ ல் தார்சு வீடு கட்டியுள்ளார் என்பது உண்மையாகும். ஆனால் 01.10.2017 ல் மனுதாரர்களுக்கு தெரியாமல் மனுதாரர்கள் இல்லாத போது 12 அடி அகல வண்டிப்பாதையில் 7 அடி ஆக்கிரமித்து காம்பவுண்ட் சுவர் எழுப்பியதாக கூறுவது பொய்யாகும். மேலும் மீதி 5 அடி மட்டும் உள்ளதாகவும் ,அதனை பயன்படுத்த முடியாமல் உள்ளதாக கூறுவதும் பொய்யாகும்.

(iii) மனுதாரர்கள் அ.வ.எண்.142/2013 ல் வண்டிப்பாதை இல்லை என மறுத்து கட்சி செய்தனர். எனவே 1ம்எதிர்மனுதாரர் நீதிமன்ற ஆணையாளரை நியமிக்க கோரி இ.ம.எண்.122/2014 தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் நீதிமன்ற ஆணையாளர் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் அளவையருடன் வழக்கு சொத்தை அளந்து தன்னுடைய அறிக்கையை தாக்கல் செய்துள்ளார். மேற்படி நீதிமன்ற ஆணையாளரின் அறிக்கையின் அடிப்படையில் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. அ.வ.எண்.142/2013 ல் வண்டிப்பாதை இல்லை என கூறிவிட்டு எதிர்மனுதாரர்களை தொல்லைபடுத்துவதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள்.

(iv) அ.வ.எண்.142/2013 க்கு எதிராக மனுதாரர்கள் மே.மு.வ.எண்.38/2017 தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது. எனவே அதே வண்டித்தடத்திற்காக மீண்டும் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு முன்தீர்ப்பு தடையால் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே இம்மனு அனுமதிக்கத்தக்கதல்ல.

(v) மனுதாரர்களுக்கு மேட்டூர் சேலம் பிரதான சாலையிலிருந்து 20 அடி அகலத்தில் பாதை வசதி உள்ளது. ஆனால் பொய்யாக ச.எண்.139 ஏ/பி1 ல் உரிமை கோருகின்றனர். மனுதாரர்களின் அடாவடி செயலால் ச.எண்.139 ஏ/பி1 ல் உள்ள உரிமையாளர்கள் அந்த வண்டித்தடத்தை தடுத்து விட்டனர். அவர்களிடம் சண்டை பிடிக்க முடியாமல் இந்த எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமிப்பு செய்வதாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் 12 அடி அகலம் பொது வண்டிப்பாதைக்காக விட்டு தான் தங்களுடைய வீட்டையும், காம்பவுண்ட் சுவரையும் கட்டியுள்ளனர். எனவே எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமிப்பு செய்யாததால் மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளனர்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞரின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இம்மனு விசாரணையின் போது மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, ஆவணச் சாட்சியங்களோ எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள் தரப்பில் ச.எண்.139 ஏ/1 பி 1ம்மனுதாரர், அவருடைய சகோதரர் 1ம்எதிர்மனுதாரர், மணிவண்ணன், அவர்களுடைய தாயார் மற்றும் சகோதரிக்கு பாத்தியப்பட்டது எனவும், 05.06.1995 ல் அவர்கள் சிவானந்தம் என்பவருக்கு பொது அதிகார பத்திரம் எழுதிக் கொடுத்தனர் எனவும், மேற்படி பொது அதிகாரப் பத்திரத்தின் அடிப்படையில் சிவானந்தம் மனையிடங்களாக பிரித்து விற்பனை செய்துள்ளார் எனவும், அச்சமயத்தில் ச.எண்.139/1 பி–ல் 15 அடி அகலத்தில் பஞ்சாயத்து கான்கிரிட் ரோட்டிலிருந்து ச.எண்.47 ஏ/2 ஏ வரை ஒரு வண்டிப் பாதையை அமைத்தார் எனவும், அப்போதிருந்து அந்த வண்டிப்பாதை 15 அடி அகலத்தில் ச.எண்.139 ஏ/1 பி சென்றும் ச.எண்.47 ஏ/2 ஏ மற்றும் பொது கிணறு வரை 12 அடி அகலத்திலும் செல்கிறது எனவும், அந்த 12 அடி அகல வண்டிப் பாதைக்கு கிழக்கே மணிவண்ணன், 1ம்எதிர்மனுதாரர் மற்றும் மனுதாரர்களின் சொத்துகள் அமைந்துள்ளது எனவும், 1ம்எதிர்மனுதாரர் மணிவண்ணனிடமிருந்து 0.20 செண்டை ச.எண் 47 ஏ/2 ஏல் 08.09.2003 தேதியிட்ட கிரய பத்திரத்தின் மூலம் 20 செண்டை கிரயம் பெற்றார் எனவும், அவர் வாங்கிய 20 செண்டில் 1ம்எதிர்மனுதாரர் தார்சு வீடு கட்டியுள்ளார் எனவும், 01.10.2017 ல் 1ம்எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு தெரியாமல் மனுதாரர்கள் வெளியே சென்ற சமயத்தில் தென்வடல் வண்டிப்பாதையை 7 அடியை ஆக்கிரமித்து காம்பவுண்ட் சுவர் கட்டிவிட்டனர் எனவும், தற்போது பொது வண்டித்தடம் 5 அடி

மட்டுமே உள்ளது எனவும், ஆகவே பொருட்களை எடுத்துச் செல்லவும், டிராக்டர்களும் செல்லமுடியாமலும் உள்ளது எனவும், 1ம்எதிர்மனுதாரரை பலமுறை தொடர்புகொண்டு ஆக்கிரமிப்பை அகற்ற கோரிய போதும் 1ம்எதிர்மனுதாரர் ஆக்கிரமிப்பை அகற்றவில்லை எனவும், எனவே ஆக்கிரமிப்பை நிரூபிப்பதற்காக நீதிமன்ற ஆணையாளரை நியமிக்க கோரி மனுதாரர்கள் மனுதாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii)(a) எதிர்மனுதாரர்கள் தரப்பில் ச.எண்.139 ஏ/பி1 என்பது 1ம்மனுதாரருக்கும், அவரது சகோதரர்களுக்கும், 1ம்எதிர்மனுதாரருக்கும், மணிவண்ணனுக்கும், அவர்களுடைய தாயார் காளியம்மாள் மற்றும் சகோதரி சாந்திக்கு பாத்தியப்பட்டது என கூறுவது பொய் எனவும், 15 அடி அகலத்தில் ச.எண்.139 ஏ/1 பி–ல் இருந்து பஞ்சாயத்து கான்கிரீட் ரோடு ச.எண். 47 ஏ/2 ஏ வரை செல்கிறது என கூறுவது பொய் எனவும், மேலும் ச.எண்.139 ஏ/1 பி–லிருந்து செல்லும் வண்டிப்பாதை ச.எண்.47 ஏ/2 ஏ வரை சென்று அதன்பின்னர் 12 அடி அகலத்தில் செல்வதாக கூறுவது பொய் எனவும், 1ம்எதிர்மனுதாரர் கிரயம் பெற்ற ச.எண்.47 ஏ/2 ஏ ல் தார்சு வீடு கட்டியுள்ளார் என்பது உண்மை எனவும், ஆனால் 01.10.2017 ல் மனுதாரர்களுக்கு தெரியாமல் மனுதாரர்கள் இல்லாத போது 12 அடி அகல வண்டிப்பாதையில் 7 அடி ஆக்கிரமித்து காம்பவுண்ட் சுவர் எழுப்பியதாக கூறுவது பொய் எனவும், மேலும் மீதி 5 அடி மட்டும் உள்ளதாகவும், அதனை பயன்படுத்த முடியாமல் உள்ளதாக கூறுவதும் பொய் எனவும், எதிர்மனுதாரர்கள் 12 அடி வண்டிப்பாதைக்காக இடம்விட்டு விட்டு தான் வீடு மற்றும் காம்பவுண்ட் சுவரை கட்டியுள்ளனர் எனவும், எனவே எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமிப்பு செய்ததாக கூறுவது பொய் எனவும் கட்சி செய்துள்ளது தெரியவருகிறது.

(ii)(b) எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள் அ.வ.எண்.142/2013 ல் வண்டிப்பாதை இல்லை என மறுத்து கட்சி செய்தனர் எனவும், எனவே 1ம்எதிர்மனுதாரர் நீதிமன்ற ஆணையாளரை நியமிக்க கோரி இ.ம.எண்.122/2014 தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் நீதிமன்ற ஆணையாளர் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் அளவையருடன் வழக்கு சொத்தை அளந்து தன்னுடைய அறிக்கையை தாக்கல் செய்துள்ளார் எனவும், மேற்படி நீதிமன்ற ஆணையாளரின் அறிக்கையின்

அடிப்படையில் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது எனவும், அ.வ.எண்.142/2013 ல் வண்டிப்பாதை இல்லை என கூறிவிட்டு எதிர்மனுதாரர்களை தொல்லைபடுத்துவதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் எனவும், அ.வ.எண்.142/2013 க்கு எதிராக மனுதாரர்கள் மே.மு.வ.எண்.38/2017 தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது எனவும், எனவே அதே வண்டித்தடத்திற்காக மீண்டும் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு முன்தீர்ப்பு தடையால் பாதிக்கப்பட்டுள்ளது எனவும், எனவே இம்மனு அனுமதிக்கத்தக்கதல்ல எனவும், எனவே எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமிப்பு செய்யாததால் மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் கட்சி செய்துள்ளது தெரிய வருகிறது.

(iii) எதிர்மனுதாரர்கள் தரப்பில் அ.வ.எண்.142/2013 ல் 12 அடி பாதைஇல்லை என கட்சி செய்துவிட்டு அதே பாதை குறித்து தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு முன்தீர்ப்பு தடையினால் பாதிக்கப்பட்டுள்ளது என கூறி அந்த வழக்கின் தீர்ப்பாணை எ.ம.சா.ஆ.1 ஆகவும், தீர்ப்புரை எ.ம.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்பிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மே.மு.வ.எண்.38/2017 ன் தீர்ப்பாணை மற்றும் தீர்ப்புரை எ.ம.சா.ஆ–3 மற்றும் 4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

(iv) எ.ம.சா.ஆ.1 தீர்ப்பாணையை பரிசீலனை செய்ததில் இந்த 1ம்எதிர்மனுதாரருக்கு ஆதரவாக அந்த வழக்கில் பி அட்டவணை வண்டிப்பாதையில் 1ம்எதிர்மனுதாரருக்கு உரிமை உள்ளது என விளம்புகை செய்யப்பட்டுள்ளதும், அந்த பாதையை அனுபவிப்பதை தடுக்க கூடாது என தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதும் தெரிய வருகிறது. அந்த வழக்கில் பி அட்டவணை சொத்தாக இவ்வழக்கில் கூறியுள்ள ச.எண்.47 ஏ/2 ஏ–ல் உள்ள 12 அடி அகல பாதையும், ச.எண்.48/2 ல் குறிப்பிடப்பட்டுள்ள 12 அடி அகல பாதையும் சொத்துகளாக காண்பிக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

(v) வழக்குரையை கவனமாக பரிசீலனை செய்ததில் இவ்வழக்கானது மேற்படி 12 அடி அகல வண்டிப்பாதையில் வாதிகளுக்கும் பிரதிவாதிகளுக்கும் உரிமை உள்ளது எனவும், மேற்படி பொது வண்டிப்பாதையில் 1, 2 எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமிப்பு

செய்ததை அகற்ற செயலுறுத்துக்கட்டளை பரிகாரமும், பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ வண்டிப்பாதையை ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரமும் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(vi) எதிர்மனுதாரர்கள் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட எ.ம.சா.ஆ.1 முதல் 4 வரையிலான அ.வ.எண்.142/2013 மற்றும் மே.மு.வ.எண் 38/2017 ல் ஏற்பட்ட தீர்ப்பாணை மற்றும் தீர்ப்பின்படிக்கு இவ்வழக்கு முன்தீர்ப்பு தடையினால் பாதிக்கப்பட்டுள்ளது என கட்சி செய்தபோதும், அசல் வழக்கு முன்தீர்ப்பு தடையினால் பாதிக்கப்பட்டுள்ளதா, இல்லையா என்பது குறித்து இம்மனுவில் தீர்மானிக்க முடியாது, அசல் வழக்கில் தான் தீர்மானிக்க முடியும். எனவே இவ்வழக்கு முன்தீர்ப்பு தடையினால் பாதிக்கப்பட்டுள்ளது என்பது குறித்து இம்மனுவில் தீர்மானிக்க முடியாது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(vii) அ.வ.எண்.142/2013 தீர்ப்பின்படிக்கு வழக்கு ச.எண்.47 ஏ/2 ஏ–ல் 12 அடி அகல வண்டிப்பாதை உள்ளதை உறுதிபடுத்தியுள்ளது தெரியவருகிறது. இவ்வழக்கிலும் இருதரப்பிலும் ச.எண்.47 ஏ/2 ஏ–ல் 12 அடி அகல வண்டிப்பாதை உள்ளது என ஒப்புக் கொண்டுள்ளனர். மனுதாரர்கள் தரப்பில் எதிர்மனுதாரர்கள் 12 அடி அகலத்திலுள்ள வண்டிப்பாதையில் 7 அடி ஆக்கிரமிப்பு செய்ததாக கட்சி செய்துள்ள போதும் அதனை எதிர்மனுதாரர்கள் மறுத்துள்ளது தெரியவருகிறது. எனவே மேற்படி 12 அடி வண்டிப் பாதையில் ஆக்கிரமிப்பு உள்ளதா, இல்லையா என்பது குறித்து நீதிமன்ற ஆணையாளர் தாக்கல் செய்யும் அறிக்கையானது இவ்வழக்கினை இறுதியாக தீர்மானிக்க உதவியாக இருக்கும் என்பதால் இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(viii) வழக்குரையில் ச.எண்.47 ஏ/2 ஏ–ல் உள்ள வண்டித்தடத்தின் அகலம் 12 அடி என குறிப்பிடப்பட்டு மனு சொத்து விபரத்தில் 15 அடி என தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது தெரிய வருகிறது. எனவே நீதிமன்ற ஆணையாளர் 12 அடி அகலத்தில் ஆக்கிரமிப்பு உள்ளதா என அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடுவது நீதிக்கு உகந்தது என இந்நீதிமன்றம் முடிவு செய்து அதன் அடிப்படையில் நீதிமன்ற ஆணையாளர் தன்னுடைய அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும் என

இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேலும் அ.வ.எண்.142/2013 ல் நியமிக்கப்பட்ட திரு.என்.கண்ணன் வழக்கறிஞரை இந்த மனுவிற்கும் நீதிமன்ற ஆணையாளராக நியமிக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக திரு.என்.கண்ணன் வழக்கறிஞர் நீதிமன்ற ஆணையாளராக நியமிக்கப்படுகிறார். கற்றறிந்த நீதிமன்ற ஆணையாளர் ச.எண்.47 ஏ/2 ஏ–ல் தென்வடலாக செல்லும் 12 அடி வண்டிப்பாதையில் ஆக்கிரமிப்பு உள்ளதா, இல்லையா என்பது குறித்தும், ஆக்கிரமிப்பு இருந்தால் அதன் அளவு குறித்து கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நில அளவையருடன் இருதரப்பு ஆவணங்களின் மூலம் அளந்தும், அத்து நிர்ணயம் செய்தும், வழக்கு சொத்தின் இயற்பியல் தோற்றம் குறித்து அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையாளரின் கட்டணம் ரூ.5000/– என நிர்ணயம் செய்யப்படுகிறது. நீதிமன்ற ஆணையாளரின் கட்டணத்தை மனுதாரர்கள் நேரடியாக செலுத்த வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. கற்றறிந்த நீதிமன்ற ஆணையாளர் இருதரப்பினருக்கும் உரிய அறிவிப்பு வழங்கியதற்கு பின்னிட்டு வழக்கு சொத்தினை பார்வையிட வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையாளரின் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய அழைக்க 06.10.2021.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:–</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:–</u>

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 16.06.2017 அ.வ.எண்.142/2013 ன் தீர்ப்பாணை | சான்றிட்டநகல் |
| எ.ம.சா.ஆ.2 | 16.06.2017 அ.வ.எண்.142/2013 ன் தீர்ப்புரை | சான்றிட்டநகல் |
| எ.ம.சா.ஆ.3 | 15.11.2019 மே.மு.அ.வ.எண்.38/2017 ன் தீர்ப்பாணை | சான்றிட்டநகல் |
| எ.ம.சா.ஆ.4 | 15.11.2019 மே.மு.அ.வ.எண்.38/2017 ன் தீர்ப்புரை | சான்றிட்டநகல் |

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.